# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 325/மா/2023**
**நாள் : 17.11.2023**

திரு. B. விஜயகுமார்,
சென்னை– 81. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–5, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, தூர்காதேவி நகர், சால்ட் குறுக்கு தெரு எண்.14/15 என்ற முகவரியில் வசிக்கும் திரு. B.விஜயகுமார் என்பவரின் 25.10.2023 நாளிட்ட மனு 27.10.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 325/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, தூர்காதேவி நகர், சால்ட் குறுக்கு தெரு எண்.14/15, என்ற முகவரியில் வசிக்கும் திரு B.விஜயகுமார் என்பவரின் 25.10.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில்,

"சென்னை-600 079, மண்டலம்-05, வார்டு-54, சவுக்கார்பேட்டை, கொத்தவால் சாவடி, மின்ட் தெரு, (அப்போல்லோ மருத்துவமனை அருகில்) கதவு எண்.160/436 என்ற இடத்தில் திரு. ஸ்ரீபால் P. ஜெயின் என்பவர் சென்னை மாநகராட்சியிடம் எந்த விதமான கட்டிட அனுமதியில்லாமல் தரைத்தளத்துடன் (G+4) நான்கு மாடி வணிக கட்டிடம் கட்டியது தொடர்பாக நான் பலமுறை புகார் அளித்தும் இதுவரை சென்னை மாநகராட்சி மண்டலம்-05ன் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை.

2. கடந்த நான்கு வருடத்திற்கு முன்பு கொடுக்கப்பட்ட புகாருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் அளித்தார்கள். தற்போது நான்கு வருடத்திற்கு பின்பும் இதே பதிலைத்தான் அளித்துள்ளார்கள். அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் கட்டி ஒன்பது வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால் நடவடிக்கைகள் மட்டும் எடுக்கவேயில்லை.

3. நான் அறிந்த வகையில் மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடத்தின் உரிமையாளர் உள்ளூர் செல்வாக்கு மிக்கவர் என்பதால் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் இலஞ்சம் பெற்றுக்கொண்டு மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் மீது சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார்கள் என தெரிய வருகிறது.

4. எனவே இத்துடன் நான் மாநகராட்சி அதிகாரிக்கு அனுப்பிய எனது இணையதள புகார் மனுவின் நகல் (2023-576FSL) இணைத்து அனுப்பியுள்ளேன். ஆகவே உயர்திரு. ஐயா அவர்கள் எனது புகார் மனுவை கோப்பில் எடுத்து விசாரணை செய்து மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் மீதும் அதன் மீது தற்போது வரை நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீதும் சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென தங்களை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு 30.10.2023 நாளிட்ட இம்முறைமன்ற கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. அவர் தனது 3.11.2023 நாளிட்ட அறிக்கையில்**: "மனுதாரர் திரு. B. விஜயகுமார் அவர்களின் 25.10.2023 நாளிட்ட முறையீட்டு மனுவிற்கு கீழ்கண்டவாறு அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

- வார்டு 54-க்குட்பட்ட கதவு எண்.160/436, மின்ட் தெருவில் அமைந்துள்ள கட்டிடமானது 2010ஆம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது.
- இக்கட்டிடம் கட்டுவதற்கு 2009ஆம் ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் வரைபடம் வழங்கப்பட்டுள்ளது.
- வரைபடத்தில் (G+2) தரைதளம், முதல்தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- இக்கட்டிடத்திற்கு மறு மதிப்பீடு 29.06.2010 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.
- இக்கட்டிடத்திற்கு வேலை நிறுத்தம் தாக்கீது வழங்கப்பட்டது.
- உயர்நீதிமன்ற வழக்கு எண்.16555/2014ன்படி சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையம் மூலமாக மின்ட் தெருவில் கட்டப்படும் கட்டடங்களுக்கு மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது."

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 06.11.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 31.10.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 06.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–5, வார்டு 54, சௌகார்பேட்டை, கொத்தவால் சாவடி, மின்ட் தெரு கதவு எண் 160/436 என்ற இடத்தில் ஸ்ரீபால் ஜெயின் என்பவர் மாநகராட்சியில் எவ்வித கட்டட அனுமதியில்லாமல் தரைதளத்துடன் நான்கு மாடி வணிக கட்டடம் கட்டியுள்ளார். இது தொடர்பாக மாநகராட்சியில் பலமுறை புகார் மனு அளித்தும் இதுவரை மாநகராட்சியால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. எனவே, அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ள மேற்கண்ட 4 மாடி கட்டடத்தின் மீது தேவையான நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 25.10.2023 நாளிட்ட இம்முறை மன்றத்தில் அளித்துள்ள மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் செயற்பொறியாளர் 06.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.**

"மனுதாரர் தெரிவித்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–5ல் வார்டு 54 கதவு எண் 160/436 மின்ட் தெருவில் அமைந்துள்ள கட்டடம் 2010ஆம் ஆண்டு கட்டப்பட்டது. G + 2 கொண்ட இக்கட்டடத்திற்கு 2009ல் வரைபட அனுமதி மாநகராட்சியால் அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வார்டு, 2009ல் மண்டலம்–3ஆக இருந்து, தற்போது மண்டலம் 5ல் சேர்க்கப்பட்டுள்ளதால், மேற்கண்ட கட்டடம் தொடர்பான வரைபட நகல் கிடைக்கப்பெறவில்லை. எனவே 3.11.2023 அன்று Calling for approved Plan தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட கட்டடத்திற்கு மறு மதிப்பீடு (Re-assessment) தாக்கீதும், கட்டடத்திற்கான வேலை நிறுத்த தாக்கீதும் வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எனது 3.11.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**இந்நேர்வில், மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரின் வாக்குமூலம், அறிக்கை ஆகியவை கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரிய வருகின்றன.**

"மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–5, வார்டு–54, சௌகார்பேட்டை கொத்தவால்சாவடி, மின்ட் தெரு, கதவு எண்.160/436 என்ற முகவரியில் திரு. ஸ்ரீபால் ஜெயின் என்பவர் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதியில்லாமல் நான்கு மாடி கொண்ட வணிக வளாகம் கட்டியுள்ளார் எனவும், இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–5ன் அலுவலகத்தில் புகார் மனு அளித்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும், எனவே, தன் மனு மீது உரிய விசாரணை மேற்கொண்டு அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை மின்ட் தெருவில் உள்ள 160/436 கட்டடம் 2010–ஆம் ஆண்டு கட்டப்பட்டது என்றும், இக்கட்டடத்திற்கு 2009–ஆம் ஆண்டு வரைபட அனுமதி பெருநகர சென்னை மாநகராட்சியால் அளிக்கப்பட்டுள்ளது என்றும் இக்கட்டடம் உள்ள பகுதி முன்பு மண்டலம் 3ஆக இருந்து தற்போது மண்டலம்-5ல் சேர்க்கப்பட்டுள்ளதால் அக்கட்டடத்தின் வரைபடம் கிடைக்கவில்லை என்றும், எனவே 3.11.2023 அன்று அக்கட்டட உரிமையாளருக்கு calling for approved plan தாக்கீது, மறு மதிப்பீடு தாக்கீதும், வேலை நிறுத்தம் தாக்கீதும் வழங்கப்பட்டுள்ளது என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–5ன் மண்டல அலுவலர் தன்னுடைய அறிக்கையிலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–5ன் செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–5ன் மண்டல அலுவலர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோர் தெரிவித்தவாறு மேற்கண்ட கட்டடத்திற்கு 2009–ஆம் ஆண்டு வரைபடம் அனுமதியின்படி,

2010-ஆம் ஆண்டு மறு மதிப்பீடு தாக்கீது வழங்கப்பட்டுள்ள நிலையில், அக்கட்டடம் முறையாக வரைபட அனுமதியின்படி கட்டப்பட்டுள்ளதா என்பதை கண்காணிக்க பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-5ன் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் தவறிவிட்டனர் என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. அவ்வாறு களப்பணி ஆய்வு மேற்கொண்டு இருந்தால், தற்போது அக்கட்டட உரிமையாளர் விதிமீறி கட்டடம் கட்ட இயலாமல் இருந்து இருக்கும். தற்போது விதிமீறி கட்டப்பட்ட கட்டடத்திற்கு வேலை நிறுத்தம் தாக்கீது வழங்கப்பட்டது ஒரு கண் துடைப்பாகவும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 5ன் அலுவலர்கள் தங்கள் கடமையை செய்ய தவறிய செயலை மூடி மறைக்கவும் எடுக்கப்பட்ட நடவடிக்கை என இம்முறைமன்றம் கருதுகிறது. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்- 5ன் அலுவலர் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டவாறு "உயர்நீதிமன்ற வழக்கு எண்.16555/2014ன்படி சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையம் மூலமாக மின்ட் தெருவில் கட்டப்படும் கட்டடங்களுக்கு மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ள நிலையிலும், இவ்வழக்கு சம்பந்தமாக பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மாண்பமை உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் (Report filed by the Commissioner, Greater Chennai Corporation) "the buildings having deviations in George Town Area, Greater Chennai Corporation is initiating enforcement actions, except the buildings located in the 30 streets of more than 9.00m width in which the CMDA is initiating enforcement action." குறிப்பிட்டுள்ள நிலையில், மனுதாரர் குறிப்பிட்ட விதிமீறல் கட்டிடம் மேற்குறிப்பிட்ட வரம்பிற்குள் உள்ளதா என்பது குறித்து, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5ன் மண்டல அலுவலரின் அறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5ன் மண்டல அலுவலர் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்தவாறு உயர்நீதிமன்ற வழக்கு எண்.16555/2014ன்படி சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையத்தால் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற கூற்று, இந்நேர்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5ன் அலுவலர்களின் செயல் திசைதிருப்பும் விதமாக அமைந்துள்ளது என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

மேலும் விதிமீறி கட்டப்படும் கட்டடங்கள் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து 10.1.2023 நாளிட்ட வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அரசாணை (நிலை) எண்.07ல் பின்வருமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

"In G.O. Ms. No.195, Housing and Urban Development [UD4 (1)] Department dated 5.11.2022 Government have framed Tamil Nadu Town and Country Planning (Removal of Unauthorised Development) Rules, 2022 to streamline the enforcement action on unauthorized development under Sections 56, 57 and 80(A) of Tamil Nadu Town and Country Planning Act, 1971.

1. The Government issued, among others, the following guidelines to the Tamil Nadu Town and Country Planning (Removal of unauthorized Development) Rules, 2022 to streamline the enforcement action on unauthorized development under section 56 & 57 of Tamil Nadu Town and Country Planning Act, 1971:-
   <u>Procedures / Guidelines to be followed:</u>

   (i) <u>Is there a need to call for records from the individual?</u>

(1) Hon'ble High Court of Madras in its order dated 02.11.2022 in W.P. No.28929 of 2022 and W.M.P.No.28223 of 2022 filed by Thiru. A.P. Ravi has observed as below:-

"In several cases notices are being issued requiring the alleged violators to produce the sanctioned plan. It is quite surprising that the Enforcement Authority, which is the plan sanctioning Authority also, seeks copy of the sanctioned plan from the violator concerned. We do not find any legal provision under the Town and Country Planning Act supporting such a notice. It is also found that time is granted for production of sanctioned plan and thereafter a notice is issued requiring the violator to bring the development in conformity with the sanctioned plan and on failure to bring it into conformity, lock and seal notice is issued. This procedure is not contemplated under the Town and Country Planning Act."

(ii) Since the issue of notice calling approved plan is not contemplated under the Tamil Nadu Town and Country Planning Act, 1971, as observed by the Hon'ble High Court of Madras the authority concerned should confirm from its database on whether any approval has been issued for building in the site. If the same is confirmed then the enforcing authority shall retrieve the copy of approved plan from its records and the authorized official shall carry the same for site inspection.

(iii) In cases where the database does not indicate any approval granted or copy of approved plan is not available with the enforcing authority, the principles of natural justice require an opportunity to be given to the building owner to produce the records including approved plan, if any available with them. In such cases, the notice in Form-I shall be issued by giving atleast 3 days time to produce the documents.

After issuance of notice in Form I calling for records from the individuals and on receipt of records / non receipt of the records within stipulated time, inspection should be made by the authorized officer for which notice of inspection in Form II should be issued.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், குறிப்பாக:-

<u>பிரிவு 7</u> The Ombudsman shall perform all or any of the following functions, namely-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged; (ii) Pass an order on the proved allegation in the following manner, namely-

(a) xxxx

(b) xxxx

(c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

மற்றும்

<u>பிரிவு: 12</u>(1) The ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely-

(a) x x x x

(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) x x x x

(e) x x x x

அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5 வார்டு-54க்குட்பட்ட கதவு எண்.160/436ல் கட்டப்பட்ட அடுக்குமாடி வணிக வளாகத்திற்கு 2009 ஆண்டு வரைபட அனுமதி அளித்த பிறகும், 2010 ஆண்டு மறு மதிப்பீடு தாக்கீது அளிக்கப்பட்ட பின்னரும், அக்கட்டடம் முறையாக வரைபட அனுமதியின்படி கட்டப்பட்டுள்ளதா என்பதை கண்காணிக்கத் தவறிய பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5ன் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும் விதி மீறி கட்டப்படும் கட்டடங்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது அரசாணை (நிலை) எண்.07, Housing and Urban Development (UD 4 (1)) Department dated 10.1.2023 மற்றும் அரசாணை (நிலை) எண்.195, H & UD (UD 4 (1) Department dated 5.11.2022 ஆகியவற்றை கவனத்தில் எடுத்துக் கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழங்கிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

This type of inaction, prolonged lethargy, passing the buck to some other agency without basis, deliberate delay among a host of negative symptoms on the part of the Corporation field level functionaries bring an avoidable but strong suspicion about their dedication, integrity, loyalty to the Local Body, rules and regulations. This culture is tantamount to abetting violations of Building Plan Act and conditions stipulated in the approval and without plan approval as this case exposes. Unless the Greater Chennai Corporation Commissioner

launches severe disciplinary action against the delinquent officials' hierarchy involved in not taking cognizance of such violations, the trend will continue unabated in the Chennai Corporation limits. The Zonal level leadership failure is deplorable in this connection.

2023–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. B. விஜயகுமார்,
   14/15, சால்ட் குறுக்கு தெரு, துர்கா தேவி நகர்,
   தண்டையார்பேட்டை, சென்னை – 600 081.
2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. மண்டல அலுவலர்,
   மண்டலம் – 5, பெருநகர சென்னை மாநகராட்சி,
   62, பேசின் பிரிட்ஜ் சாலை, பழைய வண்ணாரப்பேட்டை,
   சென்னை – 600 021.
4. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்